இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 149 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மார்கழி 24 – வியாழக்கிழமை 08 ஜனவரி 2026 – வெளியூர் 16+12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 149 : Thiruvalluvar Year - 2056 - Margazhi 24 - Thursday 08 January 2026 - Dak 16+12 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டில் இந்துக்களின் உரிமைகள் பறிக்கப்படுகிறதா?

# அமித்ஷாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

## திண்டுக்கல்லில் பல்லாயிரவர் திரண்ட அரசு விழாவில் விமர்சனம்!

**திண்டுக்கல், ஜன. 8 -**

**“தமிழ்நாட்டில் இந்துக்களின் உரிமைகள் பறிக்கப்படுகிறதா?” என்று ஒன்றிய அமைச்சர் அமித்ஷாவுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திண்டுக்கல்லில் நடைபெற்ற அரசு விழாவில் உரையாற்றும் போது கடும் கண்டனம் தெரிவித்தார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.1.2026) திண்டுக்கல் மாவட்டம், வேலுநாச்சியார் வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, ஆற்றிய உரை வருமாறு:-



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.1.2026) திண்டுக்கல் மாவட்டம், வேலுநாச்சியார் வளாகத்தில் நடைபெற்ற அரசு விழாவில், 337 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவிலான 111 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 174 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 212 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் இ.பெரியசாமி, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், கே.ஆர்.பெரியகருப்பன், அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்.சச்சிதானந்தம், செல்வி ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பெ.செந்தில்குமார், காந்திராஜன் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திண்டுக்கல் - புரட்சியின் பெயர்!

திண்டுக்கல் புரட்சியின் பெயர்! எழுச்சியின் பெயர்! வீரத்தின் பெயர்! வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால், பிரிட்டிஷ் படைகளுக்கு எதிராக போராடிய வேலுநாச்சியாரும், மருது சகோதரர்களும், ஊமைத்துரையும், தங்களின் அடுத்த கட்டப் போராட்டத்தை நடத்துவதற்கு திட்டமிட்ட ஊர்தான், இந்த வீரத்தின் விளை நிலமாக இருக்கக்கூடிய இந்த திண்டுக்கல்!

“சினந்து நிற்கும் சிங்கங்களே” என்று தன்னுடைய படைவீரர்களை அழைத்த ஹைதர் அலியும், “இருநூறு ஆண்டுகள் ஆடுகளைப் போல் வாழ்வதைவிட இரண்டே நாட்கள் புலியாக வாழ்வதே மேல்” என்று கம்பீரம் காட்டிய திப்பு சுல்தானும் நடமாடிய இடம் இந்த திண்டுக்கல்!

மருதுபாண்டியர், விருப்பாட்சி கோபால் நாயக்கர், ஊமைத்துரை என்று மூவரும் சேர்ந்து திண்டுக்கல், பழனி மலையில் 4 ஆயிரம் வீரர்களை இணைத்துகொண்டு போரிட்டார்கள். அப்படிப்பட்ட தீரர்கள் வாழ்ந்த இந்த திண்டுக்கல் மாவட்டத்தில் உங்களை எல்லாம் சந்திப்பதில் நான் அளவு கடந்த மகிழ்ச்சி அடைகிறேன்! பெருமை அடைகிறேன்!

ஆங்கிலப் புத்தாண்டை கொண்டாடி விட்டு, தமிழர் திருநாளாம் பொங்கல் நாளை வரவேற்க காத்திருக்கும் உங்களுக்கு இனிப்பான சர்க்கரைப் பொங்கலை போல அறிவிப்பை வழங்கிவிட்டு தான், இங்கு வந்திருக்கிறேன்.

### இது ‘ஐ.பி.’ மாவட்டம்!

**இது ‘ஐ.பி.’ மாவட்டம். திண்டுக்கல் பூட்டு எவ்வளவு உறுதியானதோ, அதே அளவிற்கு உறுதியுடன் இந்த மாவட்டத்தை கட்டிக் காத்து, வளர்ச்சியை நோக்கி அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார் நம்முடைய அமைச்சர் ஐ.பி. அவர்கள்!**



எங்களைப் பொறுத்தவரையில், இது ‘ஐ.பி.’ மாவட்டம். திண்டுக்கல் பூட்டு எவ்வளவு உறுதியானதோ, அதே அளவிற்கு உறுதியுடன் இந்த மாவட்டத்தை கட்டிக் காத்து, வளர்ச்சியை நோக்கி அழைத்துச் சென்று கொண்டிருக்கிறார் நம்முடைய அமைச்சர் ஐ.பி. அவர்கள்!

அதேபோல, உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணியும் சிறப்பாக செயல்பட்டு வருகிறார். அதனால்தான் தொடர் வெற்றிக்கு சொந்தக்காரராக இருக்கிறார். அவரின் துறையில், நம்முடைய திராவிட மாடல் அரசு செய்திருக்கக்கூடிய ஒரே ஒரு சாதனையைப் பற்றி நான் சொல்ல விரும்புகிறேன்.

அ.தி.மு.க. ஆட்சியில், 10 ஆண்டு காலம் கொள்முதல் செய்யப்பட்ட நெல் அளவு 1 கோடியே 79 இலட்சத்து 81 ஆயிரத்து 152 மெட்ரிக் டன்! ஆனால், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் வெறும் நான்கரை ஆண்டுகளில், 1 கோடியே 99 இலட்சத்து 75 ஆயிரத்து 710 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் நாங்கள் செய்திருக்கிறோம். நன்றாக கவனியுங்கள் அ.தி.மு.க.வின் பத்தாண்டுகளை விட நம்முடைய ஐந்தே வருடத்தில், 19 இலட்சத்து 94 ஆயிரத்து 558 மெட்ரிக் டன் அதிகமாக நாம் கொள்முதல் செய்திருக்கிறோம். இது சாதாரணமானது அல்ல; மிகப் பெரிய சாதனை. இந்த சாதனைக்கு சொந்தக்காரர் தான் நம்முடைய சக்கரபாணி அவர்கள்.

### இது அரசு விழாவா? மாநாடா?

இன்றைய விழாவை பொறுத்த வரைக்கும், 337 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 111 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, 174 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 212 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 2 இலட்சத்து 62 ஆயிரத்து 864 பயனாளிகளுக்கு, ஆயிரத்து 82 கோடி ரூபாய் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு நான் இங்கே வந்திருக்கிறேன். மொத்தம், ஆயிரத்து 595 கோடி ரூபாய் மதிப்பிலான மாபெரும் விழாவாக இது அமைந்திருக்கிறது!

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## எஸ்.ஐ.ஆர். பணி: 12 மாநிலங்களில் 6.5 கோடி வாக்காளர்கள் நீக்கம்!

*புதுடெல்லி, ஜன. 8 -*

*எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பை மீறி மாநில வாரியாக எஸ்.ஐ.ஆர். நடவடிக்கை மூலம் வாக்காளர்கள் வடிகட்டப்படுகின்றனர். அந்த வகையில், பீகாரை தொடர்ந்து தமிழ்நாடு, மேற்குவங்கம், கேரளா, உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம், குஜராத், கோவா, சத்தீஸ்கர் ஆகிய 9 மாநிலங்களிலும், அந்தமான் நிக்கோபார், லட்சத்தீவு, புதுச்சேரி உள்ளிட்ட 3 யூனியன் பிரதேசங்களிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தப் பணி நடைபெற்று வருகிறது.*

*இதில், ஒவ்வொரு மாநிலமாக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டு வருகின்றன. அதில், பல லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையினரும், பெண்களும், பா.ஜ.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு எதிரானவர்களும் அதிகளவில் நீக்கப்பட்டனர்.*

*இதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து உச்சநீதிமன்றத்தில் வழக்குகளையும் தொடர்ந்துள்ளன.*

*இந்நிலையில், 12 மாநிலங்களில் நடைபெற்று வரும் எஸ்.ஐ.ஆர். பணிகள்மூலம் இதுவரை ஆறரை கோடி பேர், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.*

*அதிகபட்சமாக உத்தரப்பிரதேச மாநிலத்தில் 2 கோடியே 17 லட்சம் வாக்காளர்களும், தமிழ்நாட்டில் 97 லட்சம் வாக்காளர்களும் எஸ்.ஐ.ஆர். மூலம் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

## தமிழ்நாட்டில் புதிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி: கனமழைக்கு வாய்ப்பு!

*சென்னை, ஜன. 8 -*

*தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் இந்திய பெருங்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி, தீவிர காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக உருவெடுத்து, மண்டலமாக வலுவடைந்தது. இது, அடுத்த 72 முதல் 90 மணி நேரத்தில் அதாவது 10ம் தேதியன்று மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் வலுப் பெறக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.*

*இதனிடையே, வருகிற 9ம் தேதி மயிலாடுதுறை, திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, நாகை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு உள்ளதாகவும், 10ம் தேதி கடலூர், மயிலாடுதுறை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் மிக கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.*

*இதேபோன்று, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம் உள்ளிட்ட மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக தெரிவித்துள்ள வானிலை ஆய்வு மையம், வரும் 11ம் தேதி சென்னை, செங்கல்பட்டு, காஞ்சி புரம், திருவள்ளூர், விழுப்புரம் உள்ளிட்ட 10 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.*

## தலா ரூ.3 ஆயிரம் ரொக்கப் பரிசுடன் பொங்கல் தொகுப்பு!

# முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலந்தூரில் இன்று தொடங்கி வைக்கிறார்!

**சென்னை, ஜன. 8 -**

**பொங்கல் பரிசுத் தொகுப்பு வினியோகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆலந்தூரில் இன்று (வியாழக்கிழமை) தொடங்கி வைக்கிறார். அனைத்து ரேஷன் கடைகளிலும் அன்றே வழங்கப்படும்.**

தமிழர் பண்டிகையாம் பொங்கல் திருநாளை சிறப்பாக கொண்டாட தமிழக அரசு சார்பில் ஆண்டு தோறும் பொங்கல் பரிசுதொகுப்பு பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு பொங்கல் ரொக்கப்பரிசு வழங்காத நிலையில், இந்த ஆண்டு பொங்கல் பரிசாக ரூ.3 ஆயிரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை கொண்டாட தமிழகத்தின் 2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 730 அரிசி ரேஷன் அட்டைதாரர்களுக்கும், இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கும், இந்த ஆண்டு பொங்கல் பரிசுத் தொகுப்பு பொருட்களுடன் தலா ரூ.3 ஆயிரம் ரொக்கத் தொகையும் வழங்கப்படுகிறது.

பொங்கல் பரிசு தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு கரும்பு வழங்கப்படுகிறது. இதற்காக, தமிழக அரசு சார்பில் ரூ.248 கோடியே 66 லட்சத்து 17 ஆயிரத்து 959 நிதி ஒதுக்கி அரசு அரசாணை வெளியிட்டது.

இந்த நிலையில் அரிசி ரேஷன் அட்டைதாரர்களுக்கு தலா ரூ.3 ஆயிரம் ரொக்கப் பரிசு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொங்கல் பரிசுத் தொகுப்பும், ரொக்கப் பரிசும் சேர்த்து மொத்தம் ரூ.6 ஆயிரத்து 936 கோடியே 17 லட்சத்து 47 ஆயிரத்து 959 செலவில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இதற்கான டோக்கன் வினியோகம் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் வழங்கப்பட்டு வரும் நிலையில், பொங்கல் பரிசுத் தொகுப்பு விநியோகத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆலந்தூர் நசரத்புரத்தில் உள்ள ரேஷன் கடையில் இன்று (வியாழக்கிழமை) தொடங்கி வைக்கிறார்.

### அனைத்து ரேஷன் கடைகளிலும்

எனவே, டோக்கன் வழங்கும் பணி 7ந் தேதிக்குள் பெரும்பாலும் முடிந்தது. மேலும், பொங்கல் பரிசுத் தொகுப்பு வினியோகம் நடைபெற உள்ள நிலையில் வரும் 9, 10, 11ஆம் தேதிகளில் ரேஷன் கடைகள் முழுமையாக செயல்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், பொங்கல் பரிசுத் தொகுப்பு திட்டத்தை தொடங்கி வைத்த உடனே அனைத்து ரேஷன் கடைகளிலும் பொது மக்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தின் அடிப்படையில் பரிசுத் தொகுப்பைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.